DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W 10. P.W.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் | தொழில் | : | உதவி ஆய்வாளர் திருப்பூர் மாவட்டம் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.01.2026.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் துறையில் எத்தனை வருடம் பணிபுரிந்து வருகிறீர்கள் என்றால் 15 வருடம். கைரேகை பிரிவில் எத்தனை வருடமாக இருக்கிறேன் என்றால் 2020ல் இருந்து திருப்பூர் மாவட்டத்தில் இதுவரையில் இருக்கிறேன். உங்கள் துறையில் உங்களுக்கு கைரேகை சம்பந்தமாக சிறப்பு பயிற்சி கொடுக்கப்பட்டதா என்றால்ஆமாஆமாம். சம்ப என்ன சம்பவ என்ன தேதியில் யார் யார் வந்திர்கள் என்றால் 23.10.2024 மாலை 4.00 மணியளவில எனது உயர் அதிகாரியான டிஎஸ்பி ஆர். சுப்பிரமணி அவர்கள், மற்றும் எஸ் முத்துக்குமார் ஆகிய நானும் சென்றோம்.
2. வீட்டில் யார் யார் குடியிருந்தார்கள் என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் மல்லிகா மற்றும் செல்வக்குமார். அங்கு கைரேகை மாதிரி எஸ்.1 எடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை செல்வகுமார் கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்தீர்களா என்றால் பார்த்தேன், மல்லிகா மற்றும் செல்வகுமார் இருவரின் கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்துள்ளேன். மல்லிகாவின் கணவர

பெயர் என்ன என்றால் செல்லமுத்து. அவரும் அந்த வீட்டில் தான் குடியிருக்கும் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் நான் செல்லும் பொழுது மல்லிகா மற்றும் செல்வகுமார் தான் இருந்தார்கள். மல்லிகா கணவர் செல்லமுத்து நீங்கள் செல்லும் சமயத்தில் இல்லாததால் நீங்கள் அவரது கையொப்பத்துடன் ஒப்பிட்டு செய்யவில்லை என்றால் ஆமாம். மேற்படி மூன்று பேரும் அந்த வீட்டில் புழங்க வாய்ப்பு உள்ளது என்றால் ஆமாம்.

3. கைரேகைகளில் எத்தனை வகைகள் உள்ளது என்றால் நான்கு வடிவம் உள்ளது. நீங்கள் எடுத்த எஸ்.1 எந்த வகை என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை. எந்த வகை என்று ஏன் குறிப்பிடவில்லை என்றால் எப்பொழுதும் அது குறித்து குறிப்பிட மாட்டோம். என்ன வகையான கைரேகை என்பது முக்கியமான விஷயம் என்றாலும் அது குறித்து நீங்கள் குறிப்பிட்டு இருக்க வேண்டும் என்றாலும் அது வழக்கமான நடைமுறையில் இல்லாததால் செய்யவில்லை. நீங்கள் வழக்கிற்காக இவ்வாறு சொல்கிறீர்கள் என்றால் இல்லை.

4. கேரளா ஆலந்தூர் காவல் நிலையத்தில் கைரேகை பெற்றுள்ளீர்கள் என்றால் ஆமாம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது A1 என்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் வலது கை மோதிர விரலுடையது என்றால் இல்லை. உங்களது அறிக்கையில் என்பது எதிரியின் வலது கை மோதிர விரல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. எஸ்.ஒன் என்பது எதிரியின் இடதுகை பெருவிரல் என்றால் சரிதான். வலது கை மோதிர விரல் ரேகையும், இடது கை பெருவிரல் ரேகைகளும் வித்தியாசப்படும் என்றால் ஆமாம், ஆனால் சம்பவ இடத்தில் கிடைத்த கைரேகைகளுடன் எதிரியுடன் கைரேகைகள் ஒப்பிட்டு பார்க்க இயலும்.

5. என்ன முறையில் வீட்டில் சோதனை செய்திர்கள் என்றால் சம்பவ இடம் சென்றவுடன் சம்பவ இடத்தை முழுமையாக பார்வையிடுவோம், ஒவ்வொரு இடமாக நுழைவுப் பகுதியில் இருந்து பரிசோதித்துக் கொண்டு செல்வோம்.

6. Lantern pattern முறை என்பது துணி மீது இருந்தாலோ அல்லது பெட்ஜிட் மீது இருந்தாலோ எடுக்க இயலும் என்றால் இல்லை எடுக்க இயலாது. துணிகள் மீது எடுக்கும் பொழுது எந்த முறையை பயன்படுத்த வேண்டும் என்றால் இது நாள் வரையில் நான் பயன்படுத்தியதில்லை. Lantern pattern முறை இல்லாமல் வேறு என்ன Method உள்ளது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. Ink

process, Heat treatment, Silver Nitrate Method and other Casting method உள்ளது என்றால் சரிதான். மேற்படி இதுபோன்ற நடைமுறைகளை நீங்கள் பயன்படுத்தவில்லை என்றால் இதனால் வரையில் பயன்படுத்தவில்லை.

7. பீரோ கைப்பிடி, கதவின் மேல்புறம், பீரோவின் வெளிப்புறம் ஆகியவற்றில் கைரேகை கிடைத்ததா என்றால். எங்கள் பவுடர் போட்டு பார்த்ததில் தெளிவாக கிடைக்கவில்லை. பீரோவின் உள் புற லாக்கரில் கிடைத்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் சொல்லும் முறையில் உள்புற லாக்கரில் எடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.
8. எதிரியின் கைரேகையை நேரடியாக பரிசோதனை செய்ய காவல்துறையில் இருந்து கடிதம் பெறப்பட்டதா என்றால் இல்லை, FAD ல் இருந்து அவரை கைது செய்யும் போது எதிரியை கைது செய்யும் பொழுது எங்களுக்கு மெயிலில் வந்தது, அதை நவ்பிஸ் தளத்தில் அப்லோடு செய்யும் பொழுது முந்தைய வழக்குகள் உள்ள கைரேகையுடன் ஒத்து போனது.
9. தற்போதுள்ள தொழில்நுட்பத்தில் எதிரியின் கைரேகை எந்த காவல் நிலையத்தில் இருந்தாலும் எடுத்துக் கொள்ள வசதி உள்ளது என்றால் அதில் பார்த்துக் கொள்ளலாம், ஆனால் பிரிண்ட் எடுக்க இயலாது. வேண்டுமென்றால் கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.
10. நீங்கள் முறைப்படி கைரேகை பதிவு செய்யவில்லை என்றால் தவறு. அவ்வாறு செய்திருந்தால் கைரேகையின் வகை குறிப்பிட்டு செய்திருப்பீர்கள் என்றால் வழக்கத்தில் இல்லாததால் செய்யவில்லை. துணிகளில் இருக்கக்கூடிய கைரேகைகளை வேறு முறைகளில் கைப்பற்றி இருக்கலாம், என்றாலும் நீங்கள் வேண்டுமென்றே கண்டுபிடிக்க இயலாத முறைகளை பின்பற்றியுள்ளீர்கள் என்றால் இல்லை. எதிரி வேறு வழக்குகளில் உள்ளதால் சம்பந்தப்பட்ட உடுமலை காவல்துறையினர் எதிரியின் கைரேகையை உங்களிடம் கொடுத்து பிக்ஸ் செய்ய சொல்லி உள்ளார்கள் என்றால் தவறு. நீங்கள் உரிய முறையை பின்பற்றவில்லை என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.